அதைப்போல தென்னை மரங்களைப் பொறுத்தவரையிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 29 தென்னை மரங்களுக்குத்தான் சேதம் ஏற்பட்டிருக்கிறது என்ற புள்ளிவிவரம் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதற்கும் உரிய நிவாரணத் தொகைகள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(இ) நீலகிரி, திண்டுக்கல் மாவட்டங்களில் பெய்த ஆலங்கட்டி மழையால் ஏற்பட்ட சேதம்—தொடர்ச்சி

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்களும், திரு. புத்திசந்திரன் அவர்களும் மார்ச் மாதம் பெய்த ஆலங்கட்டி மழையினால் ஏற்பட்ட சேதத்தினைப் பற்றி இங்கே குறிப்பிட்டுக் காட்டினார்கள். அதற்குரிய புள்ளிவிவரங்கள் என்னிடத்தில் இல்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே உரையாற்றுகிறபோது இப்போதுதான் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அதற்குரிய புள்ளிவிவரங்களை நான் பெற்று, அவர்களுக்கும் விரைந்து அந்தத் தொகையை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

"இறைவனிடம் கையேந்துங்கள், அவர் இல்லை என்று சொல்லுவதில்லை" என்பதைப்போல இறைவனாகக் காட்சி அளித்துக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் அனைத்து நிவாரணப் பணிகளும் நிறைவேற்றித் தரப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோன்று எந்தெந்தப் பகுதிகளிலே சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று சட்டமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டுக் காட்டுவார்களேயானால், ஒரு வார காலத்திற்குள்ளாகவே விரைந்து அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) போக்குவரத்து வாகனங்களுக்கு ஒரே சீரான வரி விதிப்பு முறையை அமல்படுத்துதல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன் அவர்கள் கொண்டு வந்த கவன ஈர்ப்பு குறித்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தமது பதிலுரையை அளிப்பார்கள்.